அ.வ.எண்.**118/2018** வா.சா.**1 –**செந்தில்நாதன் **15.07.2025**

**சாட்சி முன்னிலையாகி, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, 1 மற்றும் 2 ஆம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**:-

மாலை 5.15 மணி முதல் 5.55 மணி வரை

வழக்குச்சொத்து சுமார் 20 ஏக்கருக்கு 11 செண்ட் குறைவாக உள்ளது. வழக்குச்சொத்து தும்பிவாடி கிராமத்தில் உள்ளது. வழக்குச்சொத்தில் கோவிலுக்காக தனியாக விஸ்தீர்ணம் ஒதுக்கியுள்ளார்களா என்றால் சர்வே எண்.26, 27, 28 வாதி கோவிலுக்கு சொந்தமான பூமிகளாகும். வழக்குச்சொத்து சம்மந்தமாக வேறு வழக்குகள் எதுவும் பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ளார்களா என்றால் பிரதிவாதிகள் வழக்கு தாக்கல் செய்துள்ளனர். பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள வழக்கு கரூர் உரிமையியல் நீதிமன்றத்திலும், சார்பு நீதிமன்றத்திலும் தற்போதும் நிலுவையில் உள்ளது என்று சொன்னால் அனைத்து வழக்குகளும் ஒன்றாகதான் தற்போது வழக்கு நடைபெற்று வருகிறது. வழக்குச்சொத்துக்கள் கோவில் பூசாரிகளுக்கு தேவதாயம் இனாமாக கொடுக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல, ஆனுரம்மன் ஜெயங்கொண்டான் கோவிலுக்கு பாத்தியப்பட்டது, பூசாரிகளுக்கு பூஜை செய்யும்போது சொத்துக்களை பராமரிப்பதுதான் வேலை. 20.12.1892 ல் மேற்சொன்ன வழக்குச்சொத்துக்களை பூசாரிகள் கிரையம் செய்து

கொடுத்துள்ளார்கள் என்றால் இந்த கிரையம் பொய் கிரையம் ஆகும், பூசாரிகளுக்கு எந்தவொரு கிரையமும் கிடையாது. பூசாரிகளால் கிரையம் கொடுத்த சொத்துக்கள் எவ்விதத்தில் செல்லாது என்று கூறுகிறீர்கள் என்றால் 1863 ல் IFR Register (Inam Fair Register) ஆனுரம்மன் ஜெயங்கொண்ட அம்மன் என்ற பெயர்உள்ள கோவிலுக்கு தேவதாய இனமாக 18 ஆம் நூற்றாண்டில் மதுரையை சேர்ந்த மதுராயபடிகரால் கொடுக்கப்பட்ட நிலங்கள் ஆகும். 23.12.1910 கோவில் பூசாரிகள் தாவா சொத்தைப் பொறுத்து குத்தகை பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்று சொன்னால் அது தவறான பொய்யான போலியான பத்திரமாகும், பூசாரிகளுக்கு கிரையம் கொடுப்பதற்கு எந்தவொரு உரிமையும் கிடையாது. மைனர் இனாம் ஒழிப்பு சட்டம் 1963 ல் கொண்டு வரப்பட்டு அதன் வாயிலாக மைனர் இனாம் சொத்துக்கள் குறித்து அரசு சிறப்பு வட்டாட்சியரை நியமித்து அதன் வாயிலாக நிலங்கள் பட்டா போட்டு கொடுத்துள்ளார்கள் என்று சொன்னால் கோவிலுக்கு தெரியாது. பிரதிவாதிகள் தாக்கல் செய்த வழக்குகளில் நீங்கள் சிறப்பு வட்டாட்சியர் பட்டா வழங்கியது பற்றி ஒப்புக்கொள்கிறீர்களா என்றால் இந்த வழக்கிற்கு பின்னால்தான் தெரியவந்தது. 1966 என்ற ஆண்டில் சிறப்பு வட்டாட்சியர் நாளிதழில் விளம்பரம் செய்து யார், யார் சுவாதீனத்தில் உள்ளார்களோ அவர்களை விசாரித்து முறைப்படி சுவாதீனத்தின் அடிப்படையில் இனாம்

ஒழிப்பு செய்து அதற்கு பிறகு ரயத்துவாரி பட்டா சுவாதீனத்தில் இருந்தவர்களுக்கு கொடுக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. மைனர் இனாம் ஒழிப்பு சட்டத்தின் கீழ் பட்டா வழங்கப்பட்டால் அந்த நிலத்திற்கு முந்தைய உரிமையாளருக்கு எந்தவொரு உரிமையும் இல்லை என்று அர்த்தமாகும் என்று சொன்னால் சரியல்ல, அது கோவில் நிலமாகும். ரயத்துவாரி பட்டா வழங்கிய பிறகு அதற்கு முந்தைய ஆவணங்கள் அனைத்தும் செல்லத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. 1966 ஆம் ஆண்டிற்கு ரயத்துவாரி பட்டா வழங்கிய பிறகு 58 ஆண்டுகள் கழித்து இந்த வழக்கு தாக்கல் செய்திருப்பது சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகள் வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டுதான் நீங்கள் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்று சொன்னால் சரிதான். 1892 ஆம் ஆண்டிற்கு பிறகு வாதி கோவிலுக்கு இன்றைய தேதி வரை உள்ள ஆவணங்கள் எதுவும் இல்லை என்று சொன்னால் சரியல்ல, இன்றுவரை 12 ஆவணங்கள் உள்ளது. இந்து அறநிலையத்துறை சார்பாக தாவாச்சொத்துக்கள் கோவிலுக்கு சொந்தமானது என காண்பிக்கும் ஆவணங்கள் இல்லை என்று சொன்னால் சரியல்ல, 12 ஆவணங்கள் உள்ளது. இந்து அறநிலைத்துறையினுடைய சொத்து பதிவேட்டில் வழக்குச்சொத்துக்கள் கோவில் நிலம் என்று குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் தவறு. சிறப்பு வட்டாட்சியர்

பிறப்பித்த உத்திரவின்மீது நீங்கள் மேல்முறையீடு செய்யாமலும், கடந்த 58 ஆண்டுகளாக நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்று சொன்னால் வாதி கோவிலுக்கு இந்த தகவல்பற்றி எதுவும் தெரியாது, ஆகையால் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. இந்த வழக்கில் இந்து அறநிலையத்துறையை ஒரு கட்சியினராக சேர்க்கவில்லை என்று சொன்னால் இந்து அறநிலையத்துறையால் எங்களை வழக்காடும்படி ஆணையிட்டுள்ளார்கள். 28.07.2018 ஆம் தேதிய இந்து அறநிலையத்துறை ஆணையரின் உத்திரவை மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை ரத்து செய்துவிட்டது என்று சொன்னால் தவறு. வருவாய் துறையினரை இந்த வழக்கில் ஒரு தரப்பினராக சேர்க்கவில்லை என்று சொன்னால் சரிதான். தாவாச்சொத்துக்கள் கோவில் நிலம் இல்லாததால் நீங்கள் இந்து அறநிலையத்துறையை கட்சி சேர்க்கவில்லை என்று சொன்னால் தவறு. மைனர் இனாம் ஒழிப்பு சட்டத்தின்கீழ் சிறப்பு வட்டாட்சியர் பிறப்பித்த உத்திரவினை 3 மாத காலக்கெடுவிற்குள் ஒரு வருட காலம் அரசுக்கும் மேல்முறையீடு செய்ய காலஅவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. நீங்கள் வருவாய் துறை அதிகாரிகளை இந்த வழக்கில் சேர்க்காததற்கு காரணம் மேல்முறையீடு செய்ய காலதாமதம் உள்ள விபரம் தெரியவரும் என்பதால்தான் சேர்க்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கு

தாக்கல் செய்வதற்கு எந்த ஒரு சட்ட முகாந்திரமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. இணை ஆணையரின் உத்திரவு மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தால் ரத்து செய்யப்பட்டுள்ளதால் இந்த வழக்கு தாக்கல் செய்ய உரிமையில்லை என்று சொன்னால் தவறு. 1892 ஆம் ஆண்டிற்கு பிறகு மைனர் இனாம் ஒழிப்பு சட்டத்தின்கீழ் பிரதிவாதிகளுக்கு சொத்தை விற்ற நபர்களுக்கு பட்டா வழங்கப்பட்டது என்றும், தாவாச்சொத்திற்குரிய பட்டா வைத்துள்ளவர்கள்தான் பிரதிவாதிகளுக்கு தாவாச்சொத்தின் சில பகுதிகளை விற்றுள்ளார்கள், ஆகையால் அது சட்டப்படி உள்ளது என்று சொன்னால் சரியல்ல.

**1, 2 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.**

ஒம்/.K.H.இளவழகன்
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.